# திருக்குடும்ப தேவாலயம் காஜாங்

*11, JALAN GEREJA, 43000 KAJANG*
**தொலைபேசி எண்** : *03-8733 1154*
**அகப்பக்கம்** :*www.hfckajang.org.my* **மின்அஞ்சல்** :*hfckajang@gmail.com*

*Scan for updates*

பங்கு அருள்பணியாளர் : மறைதிரு. மைக்கல் சுவா
துணை அருள்பணியாளர் : மறைதிரு. போனவென்ச்சர் ராயப்பன்
துணை அருள்பணியாளர் : மறைதிரு. பிலிப் சுவா

கல்லூரி/பல்கலைக்கழக குழு :
சகோ. மார்கிரேட் பெரேய்ரா ஆர்.ஜீ.எஸ்
*pereiramargaret01@yahoo.com*

## பங்கு திருப்பலி நேரங்கள்

| திகதி | நேரம் | திருப்பலி | குறிப்பு |
|---|---|---|---|
| *07/06/2026* (**ஞாயிறு**) | **காலை** *7.00*<br>**காலை** *9.30*<br>**காலை** *11.30*<br>**பிற்பகல்** *1.30* | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி மாண்டரின்<br>திருப்பலி தேசிய மொழி | கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழா |
| *08/06/2026* (**திங்கள்**) | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | புனித மரிய தெரேசா சிராமெல் கன்னியர் |
| *09/06/2026* (**செவ்வாய்**) | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | புனித எபிரேம் (மறைவல்லுநர்) |
| *10/06/2026* (**புதன்**) | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| *11/06/2026* (**வியாழன்**) | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | புனித பர்னபா (திருத்தூதர்) |
| *12/06/2026* (**வெள்ளி**) | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | இயேசுவின் திருஇதயம் பெருவிழா |
| *13/06/2026* (**சனி**) | **காலை** *7.00*<br>**மாலை** *5.30*<br>**மாலை** *6.00*<br>**மாலை** *7.30* | திருப்பலி ஆங்கிலம்<br>இடைவிடா சகாய மாதா நவநாள் செபம்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி யூ.பி.எம் | புனித அந்தோனியார் (மறைப்பணியாளர், மறைவல்லுநர்)<br><br>தூய கன்னி மரியாவின் மாசற்ற இதயம் |
| *14/06/2026* (**ஞாயிறு**) | **காலை** *7.00*<br>**காலை** *9.30*<br>**காலை** *11.30*<br>**பிற்பகல்** *1.30* | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி மாண்டரின்<br>திருப்பலி தேசிய மொழி | பொதுக்காலம் 11ஆம் வாரம் ஞாயிறு |

### 1. நற்கருணை மறைப்பொருள் ஆழமான புரிதல்

**திருப்பலி பற்றிய ஆழமான புரிதல்**

நமது துணை **அருள்பணியாளர் போனவென்ச்சர் இராயப்பன்** *(Rev Fr Bonaventure Rayappan)* அவர்களால் வழிநடத்தப்படும் இந்த ஆன்மீகப் பயிற்சிக்குப் பங்கு மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இதற்க்கான பதிவு தமிழ் திருப்பலிக்குப் பின் புக் பேரோவில் நடைபெறும்.

- **நாள் (Date):** 27.06.2026 (சனிக்கிழமை)
- **நேரம் (Time):** காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
- **இடம் (Venue):** *Fr Henriot* அறை
- **அன்புக் காணிக்கை (Fee):** ஒரு நபருக்கு RM5.00 (காலை உணவு)




📞 **தொடர்பு விபரங்கள் (Contact Details):**

பதிவு மற்றும் கூடுதல் தகவல்களுக்குப் பின்வரும் நபரைத் தொடர்பு கொள்க:

- **கெத்திரின் லியோன்:** *012-570 2781*
- **புவன் இராயப்பன்:** *012-398 5544*

# அறிவிப்புகள் & பங்கு நிகழ்வுகள்

***2. *ஜூன் மாத விவிலிய வகுப்பு 14.06.2026****

விவிலியம் ஒரு காதல் காவியம் என்பார்கள் கடவுள் மனிதனுக்கு எழுதிய காதல் காவியம். இம்மாத விவிலிய வகுப்பில் கற்பிக்கப்படும் *"இனிமைமிகு பாடல்"* இது உண்மை என்பதை உணர்த்தும். ஆர்வமுள்ள அனைவரும் வந்து பாருங்கள். அடுத்த ஞாயிறு 14ம் தேதி மாலை 5 மணிக்கு ஃபாதர் ஹென்றியொட் அறையில் வகுப்பு நடைபெறும். வகுப்புக்கு முன்பு சிற்றுண்டி வழங்கப்படும்

***3.உதவி மையம் (Help Desk)***

எங்கள் உதவி மையம் *(Help Desk)* இந்த வார இறுதியில் திறந்திருக்கும். திருப்பலி ஒப்புக்கொடுத்தல் *(Mass offerings)*, புதிய பங்குமக்களாகப் பதிவு செய்தல், இல்லங்களை ஆசீர்வதிப்பதற்கான விண்ணப்பங்கள், திருமுழுக்கு *(Baptism)*, திருமண நடைமுறைகள் மற்றும் கத்தோலிக்க விசுவாசத்தைப் பற்றி அறிய விரும்புவோர் என எவ்வித விபரங்களுக்கும் எங்களை அணுகலாம். உங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற தயக்கமின்றி எங்களிடம் வரவும்.

***4. தந்தையர் நாள் சிறப்பு விற்பனை & உலக இளைஞர் நாள் (WYD 2027) நிதி திரட்டல்***

தந்தையர் நாள் முன்னிட்டு, நமது பங்கு இளைஞர் பணிக்குழு, உலக இளைஞர் நாள் 2027-க்கான *(World Youth Day 2027)* நிதி திரட்டும் முயற்சியின் ஒரு பகுதியாக, தந்தையர் நாள் பரிசுப் பொருட்கள் விற்பனையை நடத்தவுள்ளனர். முன்பதிவுகள் *(Pre-orders)* தற்பொழுது திறக்கப்பட்டுள்ளன; ***2026 ஜூன் 14*** ஆம் தேதி வரை நீங்கள் முன்பதிவு செய்யலாம். கூடுதல் விபரங்கள் மற்றும் உங்கள் பதிவுகளைச் செய்ய, தயவுசெய்து கீழே உள்ள ***QR குறியீட்டை (QR code)*** ஸ்கேன் செய்யவும். பரிசுப் பொருட்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே உள்ளதால், முன்வருபவருக்கே முதலிடம் *(First-come, first-served)* என்ற அடிப்படையில் பதிவுகள் ஏற்றுகொள்ளப்படும்.
மேல் விபரங்களுக்கு, ***கிரகரி பவித்திரன் :019-5050302*** என்ற எண்ணில் தொடர்பு கொள்க.




***5.2026-2027 ஆம் ஆண்டிற்கான ஓர்டோ (Ordo)***

புத்தகங்கள் விற்பனைக்குத் தயாராக உள்ளன. இதன் விலை தலா *RM6.00* ஆகும். வாங்க விரும்புகின்றவர்கள், தயவுசெய்து உங்கள் *(BEC)* அ.தி.ச தலைவர்கள் மூலமாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். *(BEC)* அ.தி.ச தலைவர்கள், உங்கள் பதிவுகளை *10* ஜூன் *2026*-க்குள் பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

***6.ஜூன் மாதம் அ.தி.ச திருப்பலி 2026***

***அ.தி.ச 3 புனித அந்தோனியார், பாலகோங்***
*(BEC 3 St. Anthony, Balakong Zone)*
**நாள்:** *19/6/2026* வெள்ளிக்கிழமை
**நேரம்:** இரவு *8.30* மணி
**இடம்:** ஸ்டீவன் & ஜெசிகா இல்லம்
*21*, தாமான் புக்கிட் ஏமாஸ் *3*, தாமான் புக்கிட் ஏமாஸ், பாலகோங்.
**தொடர்புக்கு:** பால் நிக்சன் *012-6515777*
இப்பகுதியில் வசிக்கும் அனைத்து உறுப்பினர்களையும், இங்கு வசித்தும் இதுவரை அ.தி.ச-யில் *(BEC)* தங்களை இன்னும் பதிவு செய்து கொள்ளாத பங்கு மக்களையும் எங்களோடு இணைந்து கொள்ள அன்போடு வரவேற்கிறோம்.

***7.உலகளாவிய திருமண சந்திப்பு***

திருமணமான தம்பதியருக்கான ஆங்கில மொழி தங்கிப் பயிலும் வார இறுதி மகாநாட்டை *(live-in weekend)* எதிர்வரும் ***2026 ஜூலை 3 முதல் 5 வரை,*** Days Hotel & Suites, Fraser Business Park, Kuala Lumpur இல் ஏற்பாடு செய்துள்ளது. இந்த வார இறுதி நிகழ்வில் எங்களுடன் இணைந்து கொள்ள உங்களை அன்போடு அழைக்கிறோம். இதுகுறித்த கூடுதல் விவரங்களுக்கு ***ஜேம்ஸ் (019-3562321) / மேண்டி (012-3718756)*** ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.



***8.இயேசுவின் திருஇதயம் பெருவிழா***

| நாள் | நேரம் | திருப்பலி |
|---|---|---|
| *12.06.2026* (வெள்ளி) | காலை *7.00* | ஆங்கிலம் |




***உங்கள் காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி***

**வார இறுதி காணிக்கை**
***30.05.2026 & 31.05.2026 : RM 13, 540.00***
**புலம்பெயர்ந்தோர் காணிக்கை *: RM 8, 694.00***

***9.முதிர்நிலை கிறிஸ்தவப் புகுமுகச் சடங்குமுறை (RCIA) 2026/2027 / NEW RCIA INTAKE***

இயேசு கிறிஸ்துவுடனான உறவின் அழகைக் கண்டறியவும் கூடிய ஒரு வரவேற்கத்தக்க, எவ்வித கட்டாயமும் இல்லாத சூழலாகும்.
***யார் கலந்து கொள்ளலாம்?***

- இதுவரை திருமுழுக்கு *(Baptism)* பெறாதவர்.
- பிற கிறிஸ்தவ சபைகளில் திருமுழுக்கு பெற்று, கத்தோலிக்க மதத்தைப் பற்றி அறிய விரும்புவர்.
- திருமுழுக்கு பெற்றும், முதல் நற்கருணை *(First Holy Communion)* /உறுதிப்பூசுதல் *(Confirmation)* அருளாடையளங்களைப் பெறத் தவறிய கத்தோலிக்கர்கள்.
- திருஅவை என்ன போதிக்கிறது, ஏன் போதிக்கிறது என்பதைப் பற்றிய ஒரு "நினைவூட்டல் வகுப்பை" *(Refresher course)* விரும்பும் கத்தோலிக்கர்கள்.

தொடர்புடைய மொழிப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளவும் / பதிவு செய்ய *QR* குறியீட்டை *(QR Code)* ஸ்கேன் செய்யவும்.

| **ஒருங்கிணைப்பாளர்** | **மொழி** | **தொடர்பு எண்** |
|---|---|---|
| ஆலன் | ஆங்கிலம் | *012 203 7874* |
| கிம்பூன் | தேசிய மொழி | *019 374 8044* |
| தெரசா | மாண்டரின் | *016 357 6857* |
| ரேமண்ட் | தமிழ் | *016 476 0451* |

***10.மறைக்கல்வி பணிக்குழு***

மறைக்கல்வி வகுப்பு வருகிற ***14/06/2026*** முதல் அந்தந்த மொழி வகுப்புகளின் நேரப்படி மீண்டும் தொடங்கும்.
வகுப்பு நேரங்கள்:

- தமிழ்: காலை *8.30 ~* காலை *9.30*
- மாண்டரின் : காலை *9.45 ~* காலை *10.45*
- ஆங்கிலம்: காலை *11.00 ~* மதியம் *12.00*
- தேசிய மொழி: மதியம் *12.15 ~* மதியம் *1.15*